Registered as a News paper in Sri Lanka பக்கங்கள் 06 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 ஏப்ரல் (20 - 04 - 1991) சனிக்கிழமை ஓசை 61

## சவச்சாலை - குசினி தொடர்பிற்கு ஈக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் சவச்சாலை இலையான்கள் அதே வைத்தியசாலையின் சமையலறைக்குள்ளும் மொய்த்து இரண்டு பகுதிக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சவச்சாலைக் கதவுகள் எந்தநேரமும் 'ஓ'வெனத்திறந்தபடி இருப்பதால் அங்கு இலையான்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# இருவேறு மோதல்களில் பத்து இராணுவம் பலி

## புலிகளால் ஆயுதங்கள் மீட்பு

(நமது நிருபர்)

**வடக்கு கிழக்கில் நேற்று முன்தினம் நிகழ்ந்த இரு வேறு சம்பவங்களில் பத்து சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களின் பல ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.**

திருமலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை 7.45 மணியளவில் குரங்குப் பாலம் (மங்கி பிறிச்) இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் விளாங்குளம் முகாமிற்கு சென்று கொண்டிருக்கையில் இடையில் வைத்து விடுதலைப் புலிகள் இவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலின் போது ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களின் ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதல் சம்பவத்தை ஊர்ஜிதம் செய்த சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் நான்கு இராணுவம் கொல்லப்பட்டதாக அறிவித்தது.

### ஆயுதங்கள் மீட்பு

இத் தாக்குதலின் போது இராணுவத்தினரிடம் இருந்து பல ஆயுதங்கள் மீட்கப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு:

- ★ ஏ. கே. எல். எம். ஜி 01
- ★ ரம் மகசீன் 08
- ★ ரி 81 ரகதுப்பாக்கி 2
- ★ மகசீன் 08
- ★ ரி 56-ii ரகதுப்பாக்கி 02
- ★ எம். ஐ. ரவைகள் 382
- ★ ஜே. ஆர் கைக்குண்டு 01

### மன்னாரில் 5படைபலி

மன்னார் மாவட்டத்தில் ஆண்டான்குளம் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் இராணுவத்தைச் சேர்ந்த ஐவர் கொல்லப்பட்டனர் என்று கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் செய்தி வெளியிட்டது.

## வீரவணக்கம்

### கப்டன் ரகுபதி லக்ஸ்மன்

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலை மாவட்டத்தில் குரங்குப்பாலம் முகாமில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்று முன்தினம் ஏற்பட்ட மோதலில் கப்டன் ரகுபதி (நல்லதம்பி தவசீலன் கந்தளாய், திருக்கோணமலை) லக்ஸ்மன் (வேலாயுதம் சந்திரலிங்கம், சீனன்குடா, கறடிப் பூவல், திருக்கோணமலை) ஆகிய இரு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

### மஞ்சலன்

வவுனியாவில் நேற்று முன்தினம் நிகழ்ந்த வெடிவிபத்துச் சம்பவமொன்றில் மஞ்சலன் (சண்முகவேல் சத்தியசீலன், ஒலிவர் ஸ்ரேட், நுவரெலியா) என்ற போராளி வீரமரணம் அடைந்துள்ளார்.

### றொக்கி

மன்னார் பரப்புக்கடந்தானில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் றொக்கி (வரதபிள்ளை செல்வகுமார், சிவன்வீதி, ஆவரங்கால்) என்பவர் வீரமரணமடைந்துள்ளார்.

### தங்கச்சி

நேற்றுக்காலை 6 மணியளவில் வீமன்காமத்தில்ஏற்பட்ட வெடிவிபத்துச் சம்பவமொன்றில் தங்கச்சி (முருகையா நிமலகாந்தன், தெல்லிப்பளை) என்ற போராளி வீரமரணம் அடைந்துள்ளார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### அன்னை பூபதி ஞாபகார்த்த நாள்

## குடாநாடெங்கும் நினைவுகூரப்பட்டது

அன்னைபூபதியின் மூன்றாம் ஆண்டு நினைவுக் கூட்டங்கள் நேற்று வடக்கு கிழக்குப்பகுதி எங்கும் நடைபெற்றன. குடாநாட்டில் இடம்பெற்றபல்வேறு கூட்டங்களிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். அனைத்துக் கூட்டத்திலும் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் பலர் உரையாற்றினர்.

வலிகாமம் பகுதியில் இடம் பெற்ற ஊர்வலங்கள் நீர்வேலி

(6ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டைக்குழப்பத்திலாழ்த்திய மொழிப் பிரச்சினை தீர்ந்தது

- பிரேமதாசா

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாண சனபத் தேர்தல்களில்போட்டியிடக்கூடிய வாய்ப்பை நாம் அவர்களுக்கு ஏற்படுத்தினோம் அப்பகுதிகளில்வாழும் மக்களிடமிருந்து ஜனநாயக ரீதியான ஆணையொன்றை அவர்கள் பெற்றிருந்தால் சட்டபூர்வமான பிரதிநிதிகள் என்ற வகையில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை தொடரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம். இவ்வாறு ஜனாதிபதி ஆர் பிரேமதாசா நேற்று சிறிலங்கா குடியரசின் இரண்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்துப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஊழியர் விபரப் பட்டியல் தமிழ்மொழியில் இல்லை

(யாழ்ப்பாணம்)

மாகாண சபையின்கீழ் பணிபுரியும் உத்தியோகஸ்தர் விபரங்களை அறிவதற்காக அண்மையில் யாழ். செயலகத்திற்கு அனுப்பப்பட்ட படிவங்களில் ஒரு தமிழ்ச் சொல்தானும் இல்லை என கச்சேரி அதிகாரிகளால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்களமும், ஆங்கிலமும் கொண்ட இந்தப் படிவத்தை உடனடியாக நிரப்பி அனுப்பி வைக்கும்படி வடக்கு கிழக்கு மாகாண சபை பதில் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்

## இடமாற்றம் தொடர்பாக முதல்நாளே முடிவு

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் இடம்பெயர்ந்து பரீட்சை நிலையத்தை மாற்றுவதற்கு விண்ணப்பித்த மாணவர்களுக்குரிய பரீட்சை நிலையம் தொடர்பானமுடிவு பரீட்சையின் முதல் நாளே அறிவிக்கப்படும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி உரையை எதிர்க்கட்சிகள் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா குடியரசின் இரண்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி பிரேமதாசா ஆற்றிய உரையை நவ சம சமாஜக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட இடதுசாரிக் கட்சிகள் புறக்கணிப்புச் செய்துள்ளன.

அவரது உரை இடம்பெற்ற சமயம் இந்தக் கட்சிகளைச் சார்ந்த பிரதிநிதிகள் எவரும் பாராளுமன்றத்தில் பிரசன்னமாயிருக்கவில்லை.

## திருமலையில் மூவர் சுட்டுக் கொலை பலர் கைது; தீவைப்பு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் இராணுவ முகாம்களில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் அந்த மாவட்டத்திலமைந்துள்ள தமிழ்ப் பொதுமக்கள் குடியிருப்புகளைச் சுற்றிவளைத்து மூன்று தமிழரைச் சுட்டுக் கொன்றதுடன் பதினொரு பேரைக் கைது செய்துமுள்ளனர். அத்துடன் இப்பகுதியிலுள்ள மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான வீடுகளை எரித்தும், பத்துக்கும் மேற்பட்ட துவிச்சக்கர வண்டிகளை உடைத்து நாசமாக்கியும், கடற்கரைச் சேனையில் பன்னிரண்டு பேரின் வள்ளம், வலை என்பனவற்றை எரித்துமுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று மூதூர், பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர், கட்டைபறிச்சான் ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தின சூடைக்குடா, சம்பூர், இலக்கந்தை, கடற்கரைச்

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வரும் முத்திரைக்கு நடப்பதென்ன?

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை 8-30 மணிக்கு இருந்த முத்திரைகள் 10-30மணிக்குள்ளாக முடிந்துவிட்டன.

இந்த நிலைமை யாழ். பிரதம தபால் கந்தோருக்கு என்றால் ஏனைய உப-தபால் கந்தோர்கள் நிலைமை எப்படி இருக்கும்?

போதியளவு முத்திரைகள் கொண்டுவரப்படுவதாக செய்திகள் வந்த ஓரிரு தினங்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாவற்குளத்திற்கு இராணுவம் திரும்பியது

பாவற்குளம், உளுக்குளம் முகாம்களில் இருந்து வெளியேறி பூவரசம்குளம், குருக்கலூர், சாளம்பைக்குளம், ராமேயன்கல் ஆகிய இடங்களில் தரித்துநின்ற சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் மாலை மீண்டும் தமது முகாம்களுக்குத் திரும்பிவிட்டனர்.

இராணுவத்தினர் தாம் கொண்டுவந்த 55 வாகனங்களுடன் வாரிக்குட்டியூரூடாக

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல்வீச்சு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று நண்பகல் பன்னிரண்டு மணியில் இருந்து வளலாய்ப் பகுதியை நோக்கி ஆறு ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன. சேதவிபரம் தெரியவில்லை.

# 31 ஆம் நாள் வீர அஞ்சலி



## மேஜர் ரஞ்சன் சித்தப்பா
### (செல்வநாயகம் - தயாளன்)

மண்ணில் உதித்தது: **17-03-1968**

மண்ணுக்காய் வித்தானது; **20-03-1991**

மாவீரா ரஞ்சனே,

நீ மீட்கத்துடித்த மண் உன் சுவடுகள் தேடி துவள்கிறது
நீ நேசித்த மக்கள் உன்முகம் தேடி ஏங்குகின்றார்கள்!
நீ அரவணைத்த பிஞ்சுகள் சித்தப்பா எங்கே என்று கதறுகின்றனர்
நீ கூடிய நண்பர்கள் உன் இழப்பால் வாடுகின்றனர்
உன் குடும்பம் உன்பிரிவு கண்டு தவிக்கின்றது
உனை நாம் பிரிந்தோம் ரஞ்சனே! உனை நாம் இனி எங்கே காண்போம்!
உன் இலட்சியம் நிறைவேறும் நிச்சயம் தமிழீழம் மலர்ந்திடும்!

உன் நினைவில்......

பருத்தித்துறை

நண்பர்கள்

(R/1336)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



வீர வேங்கை

### லெப்டினன்ட் சைமன்

(மோகனரூபன் நாகராசா)

வராகி கோவில் வீதி
கொக்குவில்மேற்கு, யாழ்ப்பாணம்.

தாயின் மடியில்
**22. 05. 1971**

தாயகத்தின் விடிவில்
**21. 03. 1991**

சைமா
நீ பள்ளி செல்லும் வயதில்
பாசறை சென்றாய்
எதிரியைக் கண்டு
அஞ்சி நடுங்கி விடாமல்
எதிரிகளின் முகாம்
சென்றிகளில் நின்றவன் நீ
எங்கள் சைமனே நீ
தமிழீழத்து மாவீரனே

சைமா
நிகழ்ந்து போன
உன் மரணம்
மானம் மிக்கவர் நேசிக்கும்
விடுதலைப் பூமியதில்
வீழ்ந்து விட்ட மாபெரும் வித்து

ஓ எங்கள் சைமனே
நீ மாணிக்கமில்லை ஆனால்
மரணம் தான் உன்னைக் கண்டு
மரணித்துப் போனது
சைமன்
உனது மரணம்
அது மரணம் அல்ல
எங்கள் தாயகத்தில்
மீண்டும் ஒரு ஜனனம் அது

சைமா
மானம் மிக்க மறவர்
தலைமையதில் - நீ
எரிமலையென நீ குமுறி நின்றாய்
தமிழீழ வரிப்புலியென நிமிர்ந்து
நின்றாய்
தமிழீழம் எனக் கூவி நின்றாய்

சைமா
உன்னை வீழ்த்திட்ட எதிரியவன்
பெருக்கி விட்டான்
ஈழத்தில் ஆயிரம வரிப்புலிகளை
உதித்து விட்ட வேங்கைகட்கு
உன் மரணம் வழிகாட்டும்
என்கின்ற விடுதலைத் தீயினில்
உன் மரணம் ஆகுதியாகும் ஐயா
ஆம் சைமனே
உனது மரணம் மீண்டும்
ஒரு ஜனனம்.

இவருடன் வல்வெட்டித்துறையில் வீர மரணமடைந்த அனைத்து போராளிகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலி!

- குடும்பத்தினர்

R-1383

---

## நினைவு கூருகின்றோம்...

**1991-04-20**

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் பருத்தித்துறையில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**லெப்.ரமணன்** (இராசசேகரம் பிறேமச்சந்திரன் - ஊறணி)

**லெப்.கந்தன்** (எட்மண்ட் சத்தியசீலன் - பருத்தித்துறை)

1988ஆம் ஆண்டு கெருடாவிலில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பின் போது வீரமரணமடைந்த

**கப்டன் ரஹீம்** (வேலாயுதர் செல்வராசா - தொண்டைமானாறு)

1989ஆம் ஆண்டு மணலாறு பிரதேசத்தில் ஏற்பட்ட தற்செயலான விபத்தின் போது எமைப்பிரிந்த

**கிளாஸ் நிக்கோவ்** (கதிரமலை சாந்தன் - கல்லூடா)

இதே ஆண்டு பண்டத்தரிப்பில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பின் போது வீரமரணமடைந்த

**லெப்.இன்பம்** (இராசையாஜெகசிவகிருஷ்ணன்- யாழ்ப்பாணம்)

இதே சம்பவத்தில் சயனைட் அருந்தி வீரமரணமடைந்த

**கபில்** (வேலும்மயிலும் சிவகுமார்-வட்டுக்கோட்டை)

**நெல்சன்** (பரிணபாலா தோமஸ் ஜேம்ஸ் - நெடுந்தீவு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்;

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/ 2385)

மாதாந்த பயிற்சிப் பரீட்சை

# இலவச கருத்தரங்கு

## GET SET TEST I

ஒவ்வொரு பௌர்ணமி (போயா) தினங்களிலும் எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றக் கூடியதான பயிற்சிப் பரீட்சை

A/L 91 விஞ்ஞானப் பிரிவு மட்டும்
(அனைத்துப் பாடங்களும்) பகுதி - I
முதல் பரீட்சை 26—04—1991

ஆண்டு - 5 (புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சை)
முதல் பரீட்சை: 28 04— 1991

O/L Dec. 91 அனைத்துப் பாடங்களும்,
பகுதி - I
(ஆண்டு 11) (ஆண்டு 10 முழுப் பாடத் திட்டமும்)
முதல் பரீட்சை 29-04 1991

★ இப்பரீட்சைகளுக்கான தோகுசிகளை பதிவாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

★ O/L Dec. 90 நடைப்பெற்ற பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மாதாமாதம் நடைபெற்றுவரும் பயிற்சிப் பரீட்சை முறையே மூன்றாவது) நடைபெறாக 29-04 1991 அன்று நடைபெறும்

★ நேரம் பெற்ற நாளின் பரீட்சை ஆரம்பிக்கப்படும் இம்முறை ஆண்டு - 11 ஆண்டு - 5 மாணவர்களுக்கும் மாதாந்த பயிற்சிப் பரீட்சை நடாத்தப்படும்.

★ எம்முடன் தொடர்பு கொண்டு தபால் மூலமாகவும் தொடர்பு கொண்டு பரீட்சைகளுக்கான ஆலோசனை வழங்கி ஊக்கப்படுத்திய பெற்றோர்கள் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்

EXAMINATION UNIT,
**BOND INSTITUTES**
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(B - 1390)


# இந்தியத் தேர்தலுக்கான திகதிகள் அறிவிப்பு

இந்திய லோக் சபாவிற்கும் மற்றும் ஏழு சட்டப்பேரவைத் தேர்தல்களுக்குமான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆந்திரப் பிரதேசத்திலும் உத்தரப் பிரதேசத்திலும் அடுத்த மாதம் 20 ஆம் திகதியும், 26 ஆம் திகதியும் வாக்குப் பதிவு நடைபெறும். பீகார் மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் அடுத்தமாதம் 2 ஆம் திகதியும் 23 ஆம் திகதியும், கர்நாடகம், மகாராஷ்டிராவில் அடுத்த மாதம் 23 ஆம் திகதியும், 26 ஆம் திகதியும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது என தலைமைத் தேர்தல் கமிஷனர் அறிவித்துள்ளார்.

ஹரியானா, இமாசலப் பிரதேசம், சிக்கிம், மேற்குவங்காளம் ஆகிய நான்கு மாநிலங்களிலும் சண்டிகார், டில்லி, அந்தமான் நிகோபார் மற்றும் லட்சத்தீவுகள் யூனியன் பிரதேசங்களிலும் அடுத்த மாதம் 20 ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெறும்.

அருணாசலப் பிரதேசம், கோவா, கேரளம், மணிப்பூர், மேகலாயா, திரிபுரா, மிசோராம், நாகலாந்து ஆகிய எட்டு மாநிலங்களிலும் டாட்ரா நகர் ஹவேலி டமன்டியு ஆகிய இரு யூனியன் பிரதேசங்களிலும் அடுத்த மாதம் 23 ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெறும். ஜம்மு, தமிழ்நாடு, புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் அடுத்த மாதம் 26 ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெறும் ஹரியானா, கேரளம், தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம், மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களிலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் லோக்சபா தேர்தல்கள், நடைபெறும் அதே நாளிலே சட்டப்பேரவைகள் வாக்குப்பதிவும் நடைபெறும்.


மீண்டும் "மிட்லண்ட் வீடியோ"
சாவகச்சேரியில்
மீண்டும் போட்டோ ஸ்ரற் பிரதி எடுக்க
செய்து கொள்ள

# 'மிட்லண்ட் வீடியோ'

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

காலை 8.00 மணியில் இருந்து பிற்பகல் 3-00 மணிவரை வேலைகள் நடைபெறும்.
(ஞாயிற்றுக்கிழமைகளில் கடைபூட்டப்பட்டிருக்கும்)

(R 1338


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



★

தாயின் மடியில்
08 - 11 - 1971

தாயக மீட்பில்
21 - 03 1991

லெப்.
கஸ்ட்ரோ
(ந. செந்தூரன்)

★


செந்தூரன், மண் மீட்புப் போரினிலே
மன்னாரில் மடிந்தவனே!
மாற்றான் மண்ணா மன்னார் இல்லை
தமிழ் மறவர் மண் மன்னார்!

மாற்றானை மன்னாரில் மண்டியிட
வைத்த நீயும் மாவீரன்
ஆனாய், அதலால் எம் நினைவினிலே
நீங்காது நிலைத்திருப்பாய்!

இவருடன் சிலாவத்துறையில் வீரமரணமடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

(R- 1329) — கன்னாதிட்டி இளைஞர்கள்

# ஓராண்டு நினைவஞ்சலி



## செல்வன் கந்தசாமி விஜயகுமார்

(யா/சாவகச்சேரி றிபேக் கல்லூரி O/L மாணவன்)

மண்ணில் 01-06-1973
மனதில் 01-05-1990

திதி: 20-04-1991

எம் அருமை விஜயனே, எங்கு சென்றாய் எம்மைவிட்டு
காலன்தான் அழைத்தானோ கடுகதி வேகத்தில்
மீளாத்துயில் கொள்ள மிகவிருப்புக் கொண்டாயோ
மீண்டும் மண்ணில் எப்போது நாம் மிக விரும்பிக் காண்பது

உனதருமைத் தோழர்கள் உனைத்தேடி ஓடிவர
நெஞ்சு பொறுக்குதில்லையடா - நினைத்துப் பார்க்கையிலே
சிந்தை கலங்குதையா, சித்தம் தடுமாறுதையா
உள்ளம் மயங்குதையா, உன்மத்தமாகுதையா

இறப்பு இயற்கைதான் - ஆனால்
உன் இளமை ஏங்க வைக்குதடா
உன் நினைவை மையாக்கி நெஞ்சினிலே கனவாகி
சுடர் விட்டு எரியுமடா...

பெற்றோர், உடன்பிறப்புகள்,
உற்றார், உறவினர்
நண்பர்கள்.

டச் வீதி,
சாவகச்சேரி.

(R - 1340

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**லெப். புலவர்**
(போகசாமி செந்தூரன் - நடராசாவீதி வல்வெட்டித் துறை)
உதயம்; 5-5-73



**லெப். ஜொனி**
(சத்தியவான் சக்திவேல் புலோலி தெற்கு, புலோலி)
உதயம்: 17-09-73



**லெப். குட்டி**
(கணபதி தங்கராசா ஐயங்கேணி, ஏறா)



**2 ஆவது லெப் காந்தராசா**
(நாகராசா ஜெயக்குமார் ஆலடி ஒழுங்கை பொலிகண்டி)
உதயம்: 25-3-74



**2 ஆவது லெப். சதா**
(மேரி இயூரா கேவராசா சந்தி ஒழுங்கை வல்வெட்டித் துறை)
உதயம்: 31-10-71

எத்தனை எத்தனை
ஜென்மங்கள்
எடுத்தாலும்......
இத்தரை மீது...
விடுதலையின்
வித்தாகவே
பிறப்போம்!
புலிகளின்
முத்திரையைப்
பொறிக்க......
நித்தமும்......
விடுதலைக் கீதங்கள்
இசைப்போம!
தமிழ்...
எத்திசையும் பரவி
எழிற்கோலம்
இரும்பையும
நிழற் புலிகளாய்
வாழ்வோம்.



**2 ஆவது லெப். அன்ரனி**
(துரைசாமி அகிலன் ராமநாதன்வீதி யாழ்ப்பாணம்)
உதயம்: 20-6-72



**வீரவேங்கை காவேரி**
(நிரஞ்சனி வைரமுத்து அல்வாய் வடக்கு, அல்வாய்)
உதயம்: 19-6-72
வீரமரணம் 2 -03-1991



**மேஜர் ரஞ்சன்**
(செல்வநாயகம் தயாளன் தம்பசிட்டி பருத்தித்துறை)
உதயம்: 17 -68



**வீரவேங்கை கிரி**
(தங்கரட்ணம் நந்தகுமார் சூலானை, சுன்னாகம்)

நாங்கள் தூக்கிய
ஆயுதங்கள்
சரிகின்ற
வேளைகளிலெல்லாம்
எங்கள் கைகள......
உதவிக்கு ஓடிவரும்!
அது வரையும் ...
எங்களின்
நினைவுத் தீ ......
உங்கள்
நெஞ்சங்களில்
ஆயிரமாயிரம்
இளம் புலிகளை
உருவாக்கட்டும்
உருவாக்கும் ...



**வீரவேங்கை விஷ்ணு**
(கனகரத்தினம் நிச்சயானந்தம் வியாபாரிமூலை பருத்தித்துறை)
உதயம்: 20-9-74



**வீரவேங்கை ஆனோல்ட்**
(கிருஷ்ணபிள்ளை குகன் பரவை கொத்தான் வீதி வவுனியா)
உதயம்: 4-12-68

**வீரமரணம் 20-03-1991**

**சிலாவத்துறைமுகாம் மோதலின் வீரமரணமடைந்த அனைத்துப் போராளிகளுக்கும் எமது அஞ்சலிகள்!**

**- வடமராட்சி மக்கள்**

B-2819

❖ சிந்தனைக்கு ❖

அடக்குமுறையை அனுமதிப்பவனும் அந்த அநீதியில் பங்கு கொள்கிறான்.

— டார்வின்எராஸ்மஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 20-04-1991

தொலைபேசி

ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

த.பெ.எண்: 05

# எல்லையைக் கடந்துவிட்ட அ.இ.அ.தி.மு.க. முயற்சி

"இலங்கைப் போராளிகளின் தவறான நடவடிக்கைகளினால் அவர்கள் தமிழக மக்களின் ஆதரவையும், இலங்கைத் தமிழர்களின் ஆதரவையும், மத்திய அரசின் ஒத்துழைப்பையும் இழந்து விட்டனர். அதே வேளை இலங்கைத் தமிழர்களின் இன்னல்களைத் தீர்க்க புதிய கௌரவமான இந்திய இலங்கை ஒப்பந்தம் ஒன்று இன்றியமையாததாகும்" என அ.இ.அ.தி.மு.க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

அ.இ.அ.தி.மு.க. தேர்தல் விஞ்ஞாபனம் இவ்வாறான அம்சங்களுடன் வரும் என எதிர்பார்க்கப் பட்டதுதான். இலங்கைத் தமிழரின் இன்னல்களைக் கேட்ட பின்பும், அகதிகளைப் பார்த்த பின்பும் தி.மு.க. ஆட்சிக் கலைப்பிற்காக இலங்கைத் தமிழர் விவகாரத்தை தமது அரசியல் இலாபத்திற்குப் பயன்படுத்த முற்பட்டவர்களிடம் இருந்து இவ்வாறான தொரு தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தவிர வேறு ஒன்றையும் எதிர்பார்ப்பதற்கு இலங்கைத் தமிழர் அவ்வளவு முட்டாள்கள் அல்ல. ஆனால் 'ஈழப் போராளிகள்'' மீது அ.தி.மு.க. தேர்தல் விஞ்ஞாபனத்தில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டிற்கும், இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்விற்கும் வைக்கப் பட்டுள்ள தீர்வுகள் பற்றி சிறிது குறிப்பிடவேண்டியது இலங்கைத் தமிழரின் கடமையாகும்.

கடந்த காலத்தில் இலங்கைத் தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவத்தினால் சொல்லொணாத் துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்டபோதும், இலட்சக் கணக்கில் அகதிகளாக இந்தியாவிற்குச் சென்றபோதும் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர அரசியற் தீர்வை ஏற்படுத்துவதற்காக இந்திய மத்திய அரசாங்கமோ, தமிழக மாநில அரசாங்கமோ நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக சகலரும் தமது அரசியல் இலாபத்திற்காகவே இலங்கைத் தமிழரின் அவல நிலையைப் பயன்படுத்த முற்பட்டனர். இதனால், இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தமிழக மக்கள் ஒருமித்த கருத்தை அடைவதையும், ஈழத் தமிழருக்காகக் குரல் கொடுப்பதையும் குழப்பி அடித்தனர். அதேவேளை மத்தியில் ஆட்சியில் இருந்த இந்திரா காங்கிரஸ் கட்சி இலங்கைப் போராளிக் குழுக்களுக்கு இடையில் முரண்பாடுகளைத் தீவிர மாக்கி இந்தியாவின் ஆதிக்க விஸ்தரிப்பிற்கு திட்ட மிட்டது. இதன் காரணமாக இந்தியாவிற்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் இடையில் நூற்றாண்டு காலமாக இருந்து வந்த நல்லுறவை சீரழித்தது.

இந்நிலையில் ஈழப்போராளிகள் தமது நடவடிக்கைகளால் தமிழ்நாட்டு மக்களின் ஆதரவை இழந்து விட்டார்கள் என்பது தவறு. இலங்கை விவகாரத்தில் தமிழ் நாட்டு மக்கள் இந்தியா குறிப்பாக தமிழக அரசியல் கட்சிகளின் அதிகார ஆசையினால் குழப்பப் பட்டு விட்டார்கள் என்பதே பொருத்தமானதாகும்.

அடுத்ததாக இலங்கைத் தமிழரின் ஆதரவையும் போராளிகள் இழந்துவிட்டார்கள் என்று எதை வைத்துக் கொண்டு அ.தி.மு கட்சியினர் கூறியுள்ளார்களோ புரியவில்லை. அ.தி.மு.கவின் தோழமைக் கட்சியான இந்திரா காங்கிரஸ் கட்சியின் எடுப்பார் கைப்பிள்ளைகளான இலங்கைத் தமிழ்க் குழுக்களை மனதில் வைத்துக்கொண்டு இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்களானால் சரி. அவர்கள் எப்பொழுது இந்தியாவுடன் இணைந்து தமிழ் மக்கள் விரோத நடவடிக்கையில் இறங்கினார்களோ அப்பொழுதே தமிழ் மக்களினால் புறக்கணிக்கப்பட்டுவிட்டார்கள் என்பது உண்மைதான். ஆனால் இன்று போராட்டம் நடத்துபவர்கள் புலிகள். அவர்கள் மக்களின் ஒத்துழைப்புடனேயே போராட்டம் நடத்துகின்றார்கள். மக்களின் ஒத்துழைப்பு இல்லாவிடில் ஒரு போராட்டத்தை நடத்த முடியாது என்பதை போராட்டங்களில் அ.தி.மு.க. தலைமை ஈடுபட்டிருந்தால் புரிந்திருக்கும்.

அதேவேளை அ.தி.மு.க. தலைமை இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்விற்கு முன்வைத்துள்ள தீர்வும் கேலிக்குரியதாகும். இலங்கையின் பிரச்சினை சிங்களவருக்கும் தமிழருக்குமே. இந்தியாவிற்கும் சிறிலங்காவிற்கும் இடையில் இல்லை. இந்நிலையில் தீர்வும் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையிலானதாகவே இருக்க வேண்டுமே ஒழிய சிறிலங்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் இல்லை. இது 1987 இல் இந்தியா விட்ட தவறைப் போன்று மீண்டும் ஒரு தவறை மேற்கொள்ளச் சொல்லும் ஒரு தேர்தல் விஞ்ஞாபனமாகும்.

இலங்கைத் தமிழர் எப்பொழுதும் இந்தியாவின் தார்மீக ஆதரவை எதிர்பார்த்தே வந்துள்ளார்கள். ஆனால், இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் அவர்கள் தலையிட விரும்பவில்லை. அதேபோன்று இந்திய அரசியற் கட்சிகளும் தமது சுயநல நோக்கிற்காக இலங்கைத் தமிழர் விவகாரத்தை பயன்படுத்துவதை விடுத்து தமக்கு உதவுவதையே இலங்கைத் தமிழர் அன்றும் இந்தியாவிடம் எதிர்பார்த்தார்கள் இன்றும் எதிர்பார்க்கின்றார்கள்.

# பேணிப் பாதுகாக்க வேண்டிய தமிழரின் சுதேச வைத்தியம்

: பாலகுமார்

(யாழ்ப்பாணம்)

புதிய பாதையில் பிரசவ வேதனையிலும் விட வேதனை வேதனை, சோதனைகளுக்கு மத்தியிலும் நுழைந்து எழுந்து நிற்கும் தமிழினமானது பேணிப் பாதுகாக்க வேண்டிய ஒரு துறையில் சுதேச வைத்தியமும் ஒன்றாகும். இது போர்க்கால பின்னணியில் மட்டும் வளராது தமிழின வாழ்நாள் முழுவதும் முழுமையான வளர்ச்சி பெற வழிகாட்ட வேண்டும். இவ்வாறு கைதடியில் அமைந்துள்ள சித்த மருத்துவ பீடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 'சுதேசியம்' பத்திரிகை வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் பாலகுமார் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் இன்றைய நிலையிலும் நேர்முழுமையான சரியான விழிப்புணர்வு ஏற்றநிலையில் உள்ளனர். இவ் இனம் விடிவிற்கும் சுதந்திரத்திற்கும் தகுதியானதா என்ற கேள்விக்கு விடையைத் தொடுக்க வழிகோலுகிறது. ஆயினும் இந்நிலையில் நேர்மையானதும் உறுதிப்



பாலகுமார்

பாடானதுமான வழிகாட்டலில் எமது விடுதலைப் போராட்டம் தொடர்வதனால் தான் மக்களிடையே தேவையானதும், மண்ணின் அசைவுக்கு ஏற்றதுமான நிகழ்வுகளும் மாற்றங்களும் இடம்பெறுகின்றன.

எந்தவொரு இனம் சகல வழிகளிலும் தற்பாதுகாப்பு போராட்டத்துக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்கின்றதோ அன்றைக்குத்தான் அது நம்பிக்கையுள்ளதாகக் கருதப்படும். அன்று முதல் இன்றைய கால விஞ்ஞான கர்ப்புத் தத்துவம் வேறு சான்றாகும். பொதுவான அடையாளங்களை நோக்கங்களை உடைய தனியான அடையாளங்களை விட்டுவிடத்தான் வேண்டும். இன்று எமது இனத்தின் தலையான நோக்கு அசைவுக்கு இந்நிலை மாற்றம் சித்த மருத்துவ துறையை சார்ந்தவர்களிடம் மட்டுமல்ல. போராளிகளிடம் மட்டுமல்ல மக்களிடையேயும் ஆழமாக உணரப்பட வேண்டிய ஒன்று எனவும் அவர் கூறினார். (ச)

ஏடுகளில் முடங்கியுள்ள

# சித்த மருத்துவ விடயங்கள் நூல்களாக வரவேண்டும்

-துணைவேந்தர் துரைராஜா

(யாழ்ப்பாணம்)

சித்தமருத்துவ துறைசார் விடயங்கள் எம்மக்கள் மத்தியில் இவரிடையே ஏடுகள் வடிவில் முடங்கியுள்ளன. அவை 'சுதேசியன்' ஊடாக நூல்வடிவில் வெளியிடப்பட வேண்டும் என நேற்று 'சுதேசியன்' பத்திரிகை வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ்ப்பல்கலைக் கழகப் பேராசிரியர் துரைராஜா தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பல ஆங்கில வைத்தியர்கள் எம் மக்கள் மத்தியில் எமது பணத்தில் படித்து விட்டு எமது மண்ணையும் மக்களையும் விட்டு வெளியே செல்லும் அவலநிலையில் சுதேச பாரம்பரிய வைத்தியம் மக்கள் தேவைக் கருதி இவ் இடைவெளியை மக்களிடையே பூர்த்தி செய்யப்படட வேண்டும். இதற்கு எமது இன வாழ்வுக்கு வழிகாட்டும் அமைப்புகளே உதவ முன்நிற்பது போல யாழ்ப்பல்கலைக் கழகமும் எந் நிலையிலும் இந்நிறைவுக்கு கை கொடுக்க தயாராக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ச)

# மேஜர் ரஞ்சன் ஞாபகார்த்தமாக நினைவாலயமும், பூங்காவும்

(பருத்தித்துறை)

தமிழீழ விடுதலைப் புலிகள் மேஜர் ரஞ்சன் (கிப்பா) ஞாபகார்த்தமாக நினைவாலயமும், சிறுவர் பூங்காவும் பருத்தித்துறையில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை முதலாம் கட்டைச் சந்தியில் மாணவர் பொது நூலகம் இயங்கும் கட்டடத்திற்கு அருகாண்மையிலேயே இந் நினைவாலயமும் சிறுவர் பூங்காவும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நினைவாலயத்தையும், சிறுவர் பூங்காவையும் நிர்மாணிக்கும் வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இவ் வேலைகள் பூர்த்தியடைந்ததும் வெகுவிரைவில் இந் நினைவாலயமும் பூங்காவும் திறந்து வைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேஜர் ரஞ்சன் மன்னார் சிறிலங்கா இராணுவ முகாம் தாக்குதலின்போது வீரமரணமடைந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (25)

# சிரமதான மூலம் வீதி செப்பனிடப்பட்டது

(மன்னார்)

அன்னைபூபதி மூன்றாமாண்டு நினைவு நாளை முன்னிட்டு பூநகரி முழங்காவில் பிரதேச சிற்றாலையினரால் 24 மைல் நீளமான மன்னார் சங்குப்பிட்டி பிரதான வீதி சிரமதானமூலம் கடந்த புதனன்று செப்பனிடப்பட்டது.

மன்னார் பிரதேச அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. எஸ். ரமேஸ் இந்த சிரமதானத்தை ஆரம்பித்துவைத்தார். முழங்காவில் குமிழமுனை, பள்ளவராயன் கட்டு, வலைப்பாடு, பூநகரி, பாண்டிக்குளம், கௌதாரிமுனை, மட்டுவில் நாடு மேற்கு, கிழக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 2500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இதய பூர்வமாக இச்சிரமதானப்பணியில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# சைக்கிள் திருட்டு

(ஈச்சமோட்டை)

அரியாலை புங்கன்குளத்தடியில் இருக்கும் கடைக்குமுன்னால் இருந்த துவிச்சக்கர வண்டி களவாடப்பட்டுள்ளது. இந்த சைக்கிள் மேற்படி கடை உரிமையாளருடையது என்பது குறிப்பிடத்தக்கது. (43)

# 118 வயது மூதாட்டி மரணம்

கிளிநொச்சி உருத்திரபுரத்தில் மகதிராணி என்னும் வயோதிப மாது 118 ஆவது வயதில் திடீரென இறந்துள்ளார். (43)

# அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்காவில் ... பலாலி தளத்துறை இராணுவ முகாம் தகர்ப்பில் வீரமரணமடைந்த லெப்டினன்ட் காண்ரோ அவர்கட்கும் அவருடன் அவ் விடுதலை வேள்வியில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட அனைத்து வீரவேங்கைகளுக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் மாபெரும் அஞ்சலிக்கூட்டமொன்று இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள ரசிகரஞ்சன சபா மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது இவ் அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

# வாய்க்காலில் வீழ்ந்த தம்பதிகள்

(குருநகர்)

வடிகாலில் வீழ்ந்த தம்பதிகளின் மோதிரமும் தொலைந்தது கடந்த புதனன்று (17-4-91) பிற்பகல் சைக்கிளில் வந்த தம்பதிகள் குடை சாண்டிலில் சிக்கியதால் வடிகாலில் வீழ்ந்து காயத்திற்கு உள்ளாகினர்.

அவர்களிடம் இருந்த அரைப் பவுண் மோதிரம் ஒன்றும் இச்சம்பவத்தில் தொலைந்ததாகவும் கூறப்பட்டது.

குருநகர் கடற்கரை வீதியில் நடைபெற்ற மேற்படி சம்பவத்தில் பலாலியில் இருந்து குருநகருக்கு இடம்பெயர்ந்து வந்தவர்களான பாலன் கந்தசாமி (வயது 41), கந்தசாமி மைதிலி (வயது 40) ஆகியோர் காயமடைந்தனர். (21)

# அமெரிக்கா வற்புறுத்தும்

அரபு இஸ்ரேலிய பிணக்குகளைத் தீர்ப்பதற்கு ஐரோப்பிய சமூகத்தின் அறிவுறுத்தலை ஏற்றுக் கொள்ளுமாறு இஸ்ரேலை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் வலியுறுத்தவுள்ளார்.

வளைகுடாப் போருக்குப் பின் மூன்றாவது தடவையாக இஸ்ரேலுக்கு விஜயம் செய்ய விருக்கும் ஜேம்ஸ் பேக்கர் தமது விஜயத்தின் போது இதனை வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த புதன் ஐரோப்பிய சமூகத்தின் வெளிநாட்டமைச்சர்களை சந்தித்த ஜேம்ஸ் பேக்கர் நேற்று முன்தினம் இரவு இஸ்ரேலுக்கு புறப்பட்டுச் சென்றார்.

# வடபகுதிசீநோர்நிறுவனத்தை மூடிவிட கொழும்பில் முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் காரைநகர் பகுதிகளில் இயங்கி வந்த சீனோர் நிறுவனத்திற்கு மூடுவிழா நடத்த கொழும்பில் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவருவதாக நம்பகரமாகத் தெரிகினறது நோர்வே நாட்டின் உதவியுடன் மீன்பிடி அபிவிருத்திக்கென இது ஆரம்பிக்சப்பட்டது. நைலோன் வலை மற்றும் கண்ணாடி இழைப் படகுகள் போன்ற மீன்பிடி உபகரணங்களின் உற்பத்தியில் இந்த ஸ்தாபனம் ஈடுபட்டிருந்தது. பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை அளித்ததோடு இப் பிரதேச மீன்பிடி அபிவிருத்தித் துறையில் குறிப்பிடத்தக்க பங்காற்றிய இந் நிறுவனத்தை மூடிவிட அமைச்சரவை மட்டத்தில் முயற்சி நடப்பதாகத் தெரியவருகின்றது.

சீநோர் நிறுவனத்தின் கொழும்புத் தலைமையகத்தில் இருந்து யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்ட கடிதமொன்றே மேற்படி செய்திக்குக் காரணமாகும். சீநோர் நிறுவனத்தில் பணியாற்றிய ஊழியர்களின் தனிவிபரங்கள் உட்பட அனைத்து ஆவணங்களையும் பெற்றுக் கொழும்புக்கு அனுப்பி வைக்கும்படி மேற்படி கடிதத்தில் கோரப் பட்டுள்ளது.

# திருநாவுக்கரசு அணிக்கு 9 இடங்கள் தி. மு. க.ஒதுக்கீடு

(சென்னை)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து வெளியேறிய திருநாவுக்கரசு தலைமையிலான அமைப்பிற்கு தி மு. க. ஒன்பது சட்டப் பேரவைத் தொகுதிகளைஒதுக்கியுள்ளது.

இதேபோல அப்துல் லத்தீப் தலைமையிலான இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கிற்குநான்கு தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. சக்திதாசன் தலைமையிலான செட்லூட் இன விடுதலை முன்னணிக்கு ஒரு தொகுதியையும் தி. மு. க. ஒதுக்கியுள்ளது.

இந்த அமைப்புக்களின் தலைவர்கள் தி. மு. க. பிரதிநிதிகளுடன் நேற்று சென்னையில் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து இந்த தொகுதி உடன்பாடு அறிவிக்கப்பட்டுள்ளது.

### இடமாற்றம்

இவ்வாறு யாழ். கல்வித் திணைக்களத்தின் பரீட்சைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரி திரு. சிவானந்தன் கூறியுள்ளார்.

பரீட்சை நிலையங்களை மாற்றித்தரும்படி இடம்பெயர்ந்த பல மாணவர்கள் விண்ணப்பித்திருந்தனர். இவர்கள் தொடர்பான இறுதி முடிவு பரீட்சைக்கு முதல்நாள் நடைபெறும் கூட்டத்திலேயே பரீட்சை நிலையமும், சுட்டிலக்கமும் அறிவிக்கப்படும் என்று அவர் கூறினார். (க)

# பஞ்சாப், அஸாம் தேர்தல் பின்போடப்படலாம்

(டில்லி)

பஞ்சாப்பிலும், அஸாமிலும் தேர்தல் நடத்துவது ஒத்திவைக்கப்படலாம். அஸாமில் மே மாதம் 31ஆம் திகதியும், ஜூன் மாதம் மூன்றாம் திகதியும் தேர்தல் நடத்தலாம் என்று அஸாம்ஆளுநர் ஆலோசனை வழங்கியுள்ளார். பஞ்சாப் ஆளுநர் பஞ்சாப்பில் ஜூன் 26ஆம் திகதி தேர்தலை நடத்தலாம் என்று தெரிவித்திருக்கிறார். இந்தத் தகவலை தலைமைத் தேர்தல் ஆணையாளர் ரி. எஸ். ஷேசன் நேற்று டில்லியில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இதேவேளை ஜம்மு - காஷ்மீர் தவிர அனைத்து மாநிலங்களிலும் வாக்காளர் பத்தாவது லோக் சபைக்குத் தங்கள் பிரதிநிதிகளை அடுத்த மாதம் 20, 23, 26 ஆகிய திகதிகளில் மூன்று கட்டமாகத் தெரிந்தெடுக்கலாம் என்று குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் முன்னதாகவே அறிவித்திருந்தார்.

இரு மாநிலங்களிலும் வேட்பாளரைப் பாதுகாப்பதற்குத் தமக்கு மேலதிகமாகக் காவற் படையினர் தேவை என்று இரு மாநிலங்களும் கேட்டுள்ளன. அஸாமும், பஞ்சாப்பும் தெரிவித்த யோசனைகளை தேர்தல் ஆணைக்குழு மிகவும் ஆழ்ந்து பரிசீலிக்கும் என்று தலைமைத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். இரு மாநிலங்களிலும் தேர்தல் நடத்துவதற்கு முதல் அரசியல் கட்சிகள் கலந்தாலோசிக்கப்படும்.

# உணவு விநியோகத்தை உடன் ஆரம்பிக்க உத்தரவு!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நடைமுறையில் இருக்கும் உலர் உணவு விநியோகத்தின் அடுத்த கட்டத்தை உடனடியாக ஆரம்பிக்கும்படி சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் செயலக புனர் வாழ்வுப்பகுதி கேட்டுள்ளது

தற்போது கையிருப்பிலுள்ள உலர் உணவு ஒரு தடவை விநியோகத்தை மேற்கொள்ளுவதற்கு போதுமானதாக உள்ளது என்றும் எனவே விநியோகத்தை நடைமுறைப்படுத்த முடியும் என்றும் நேற்று செயலகத்தில் நடைபெற்ற உணவு விநியோகம் தொடர்பானகூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (க)

## கூட்டத்திற்கு வரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட ப.நோ கூ. சங்கங்கள், தெ. ப. பொ. கூ. சங்கங்கள், ஏனைய கூட்டுறவு சங்கங்கள் சமாசங்கள் யாழ், கூட்டுறவுச் சபை ஆகியவற்றின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் அனைவரையும் நாளை ஞாயிற்றுக் கிழமைமு.பகல் 9மணியளவில் நல்லூர் ப. நோ. கூ. சங்கக் காரியாலயத்திற்கு வருகை தருமாறும் இக்கூட்டத்தில் மேதின ஏற்பாடுகள் உணவுப் பொருள் கொள்வனவுகள் சம்பந்தமாக ஆராயப்பட இருப்பதனால் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் யாழ். கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

## எர்ஷாத்சிறையில்

(டாக்கா)

பங்களாதேஷின் முன்னாள் ஜனாதிபதி எர்ஷாத் விசேட தடுப்புக்காவல் மாளிகையிலிருந்து நேற்று முன்தினமிரவு பலத்த பாதுகாப்புடன் டாக்கா மத்திய சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். ஊழல், லஞ்சம், அதிகார துஷ்பிரயோகம் போன்ற குற்றச்சாட்டுகளுக்காக நாளை விசேட நீதிமன்றத்தின் முன் அவர் கொண்டுவரப்படவுள்ளார்.

### சவச்சாலை

மொய்த்தபடி இருக்கின்றன. இதேபோல சவச்சாலைக்கு மிக அண்மையில் இருக்கும் சமையலறையின் கதவுகளும் இதே நிலையிலேயே இருப்பதால் சவச்சாலை இலையான்கள் சமையலறையில் மொய்த்து நோயாளர்களுக்கு வழங்கும் உணவுகளை அசுத்தப் படுத்தி வருவதாகவும் தெரிய வருகின்றது. (லோ)

### பாவற்குளத்திற்கு

பாவற்குளம், உளுக்குளம் ஆகிய முகாம்களுக்குத் திரும்பிச் செல்கையில் பூவரசம் குளத்தில் மக்களின் வீடுகளை உடைத்துப் பொருள்களைக் கொள்ளையடித்ததோடு, ஒரு கடைக்கும் தீ வைத்துச் சென்றுள்ளனர்.

### யாழ்.

கூட தபால் நிலையங்களில் முத்திரைகள் கிடைப்பதில்லை.

கூடிய விலையில் வெளிக் கடைகளில் முத்திரைகள் தாராளமாகக்கிடைப்பது என்னவோ உண்மைதான் என்று பொதுமக்கள் ஆச்சரியம் தெரிவிக்கின்றனர். (21)

### நாட்டைக்

பேசுகையில் குறிப்பிட்டார். மேலும்அவர், கால்நூற்றாண்டுக்கும் மேலாக நாட்டினைக் குழப்பத்திலாழ்த்திய மொழிப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது. சிங்களமும, தமிழும் அரசகரும மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. படைதாங்கு சேவைகள், பொலிஸ் சேவை உள்ளிட்ட அரசாங்கத் துறைகளில் அனைத்து நியமனங்களும் இனவிகிதாசார அடிப்படையிலும் திறமை அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பல காலமாக நிலவிவந்த தப்பெண்ணங்களையும், ஐயப்பாடுகளையும் நீக்குவதற்கு நாம் திடசங்கற்பம் பூண்டுள்ளோம் நாம் பிளவுபட்டிருந்தமையால் அந்நிய நாட்டுப் படைகள் வடக்கிற்கும், கிழக்கிற்கும்வரவேண்டியதாகியது. இவ்வாறான நிலைமை மீண்டும் ஏற்படாதருக்க மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். எந்தவித குற்றமும் செய்யாத வடக்கு, கிழக்கு மக்கள்சொல்லொணா வேதனைக்குட்பட்டுள்ளார்கள். அரசியல் இலக்குகளை எய்துவதற்கு கட்டவிழ்க்கப்பட்ட வன்முறைகளை கைவிடுதல் என்ற பிரகடனத்துடன் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப் படலாம். எனது அரசாங்கம் கருத்தொருமித்தல் என்பதில் ஆரம்பம் முதலே நம்பிக்கை கொண்டுள்ளது. எனவேதான் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இருபது அம்சங்களை சர்வகட்சி மாநாட்டிற்கு ஆற்றுப் படுத்தினேன்.

சர்வகட்சி மாநாட்டின் போது பெறப்பட்ட தீர்மானங்களை செயலாக்க சில சட்ட வாக்கங்களும் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டன என்றும் பிரேமதாசா தெரிவித்தார்.

# கெயர், யு.எஸ். எயிட் நிறுவனங்கள் 15,000 விவசாயிகளுக்கு உதவ முன்வந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

கெயர் இன்ரர்நேஷனல் நிறுவனமும், யு எஸ். எயிட் நிறுவனமும் யாழ். மாவட்டத்தின் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக 15,000 விவசாயிகளுக்கு நீரிறைப்பு இயந்திரம், மண்ணெண்ணெய் விதைகள் மற்றும் உரவகைகளை வழங்க முன்வந்துள்ளன இதற்கு உதவியாக யாழ் மாவட்டத்தின் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் பங்காற்றி வருகின்றன

இந்த முதற்கட்ட வேலைத் திட்டங்களை அவதானிக்க யு எஸ் எயிட்டின் வதிவிடப் பிரதிநிதி பமீலா போட்வின் மற்றும் கெயர் இன்ரர்நேஷனலின் வடக்குக் கிழக்குப் பிராந்திய பிரதிநிதி தர்மபாலன் ஆகியோர் எதிர்வரும் திங்கட்கிழமைமுதல் சில நாட்களுக்கு யாழ் மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர், (க)

# இந்திய இராணுவம் இன்னும் சிறிதுகாலம்இருந்திருப்பின் மோதல் அதிகரித்திருக்காது

- இந்தியத்தூதுவர்

(சென்னை

இந்திய அமைதி காக்கும் படை இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியில் இன்னும் சிறிது காலம் இருந்திருந்தால் இந்த அளவிற்கு மோதல்கள் அதிகரித்திருக்காது என்று சிங்கள தமிழ்த் தலைவர்கள் சிலர் நம்புகின்றனர் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என். எம். ஜா கூறியுள்ளார்.

இலங்கை அரசாட்சியில் தங்களுக்கும் இடமுள்ளது என்ற உணர்வை வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் அடைவதற்கு ஏற்றவகையில் சிறிலங்கா அரசு போதுமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார் அத்துடன் மிழீழ விடுதலைப் புலிகள் அல்லாத இதர குழுக்களின் நிர்வாக அமைப்புஒன்றினை ஏற்படுத்தலாம் என்று அண்மையில் இந்தியா ஒரு யோசனை தெரிவித்துள்ளது என்றும் என், எம். ஜா கூறினார்

# இலங்கை பூராகவும் உயர்கல்வி நிறுவனங்கள்

வடக்குக் கிழக்கு உட்பட இலங்கை பூராகவும்உயர்கல்வி நிறுவனங்கள் நிறுவப்படும் என உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் சித்திபெறுவோர்களில் பெருந் தொகையானோர்க்கு உயர்கல்வி பெறும் வாய்ப்பை அதிகரிப்பதற்காக கல்வி உயர் கல்வி அமைச்சு திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது இதன்படி நாடெங்கிலும் உயர்கல்வி நிறுவனங்கள் நிறுவப்படும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது இந்தத் திட்டம் இந்த வருடம் முதல் அமுல் படுத்தப்படும்

## திங்கள் ஓய்வூதியம்

இலங்கைவங்கி யாழ்ப்பாணக் கிளையில் மாசி மாதத்திற்கான ஓய்வூதியம் எதிர்வரும் திங்கள் முதல் பணமாக வழங்கப்படவுள்ளது.

கடந்த மாதம் தை மாதத்திற்கான ஓய்வூதிய வங்கியில் போதியளவு பணம் கையிருப்பில் இல்லாத காரணத்தினால் பணமாக வழங்கப்படவில்லை என்பது தெரிந்ததே.

### திருமலையில்

சேனை, சம்புக்கிளி, கூனித்தீவு, இத்திக்குளம் ஆகிய தமிழ்க் கிராமங்களைச் சுற்றி வளைத்து தமிழ் பொதுமக்களைக் கைது செய்தனர். இதில் இத்திக்குளம் என்னும் இடத்தில் வைத்து மூன்று ஆண்களைச் சுட்டுக் கொன்றதுடன் மாதவராசா அனுகதன் (வயது18) என்பவரைக் கைது செய்து முகமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இதேபகுதிகளை மறுதினமும்சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் மேலும் பத்துத் தமிழ்ப்பொதுமக்களைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

சண்முகம்பிள்ளை கணபதிப் பிள்ளை (வயது 50) சேனையூர், சண்முகம் செல்வநாயகம் (வயது 50) கட்டைபறிச்சான், சோமசுந்தரம் குணரட்ணம் (வயது 45) சம்பூர், சுப்பிரமணியம் சிவக்கொழுந்து (வயது 70) சம்பூர், கணபதிப் பிள்ளை கந்தப்பு (வயது 60) சம்பூர், இராமலிங்கம் விஸ்வலிங்கம் (வயது 20) சம்பூர், அம்பிகைபாலன் இளமாறன் (வயது14) சம்பூர், சிவதாஸ் நித்திய ரூபன் (வயது 17) சம்பூர் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர் இவர்களைக்கைதுசெய்து கொண்டு தத்தமது முகாம்களுக்கு இராணுவத்தினர் திரும்பிச் சென்றனர்.

## புகழுடல்கள் அஞ்சலிக்கு

வீரவேங்கைகள் றொக்கி, தங்கச்சி ஆகிய இரு போராளிகளின் புகழுடல்கள்பொது மக்களின் இறுதிஅஞ்சலிக்காக இன்று காலை 9மணிதொடக்கம் 10மணிவரை ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயத்தில் வைக்கப்படவுள்ளன.

பின்னர் அஞ்சலிக் கூட்டம் இடம்பெறும்இதில்விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் உரையாற்றுவார்கள் இதனைத்தொடர்ந்து வீரவேங்கைகளின் புகழுடல்கள் இராணுவ மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனஞ் செய்யப்படும், (மு)

### குடாநாடெங்கும்

அத்தியார்இந்துக் கல்லூரியில் முடிவடைந்து அங்குமாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றுடன் இரவு ஒன்பது மணியளவில் முடிவுற்றது.

தீவகத்தின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து ஊர்வலமாகச் சென்ற பொதுமக்கள் வேலணை துறையூர் ஐயனார் கோயில் வீதியில் பிரமாண்டமான கூட்டம் ஒன்று இடம் பெற்றது.

தென்மராட்சிப் பகுதியின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஒன்று கூடிய பொதுமக்கள் கொடிகாமம் மாவீரர் மண்டபத்தில் மாபெரும் கூட்டம் ஒன்றில் பங்குபற்றினர்.

வடமராட்சிப் பகுதியின் ஒவ்வொரு ஊர்களிலும் இருந்து ஒன்று சேர்ந்த மக்கள் பருத்தித்துறை ஐக்கிய தேசியக் கழகத்தில் ஒன்றுகூடி பொதுக் கூட்டம் ஒன்றைச் சிறப்புற நடாத்தினர், (லோ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம்இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.